பக்கங்கள்: 08

# காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2053 மாசி 10 செவ்வாய்க்கிழமை 22.02.2022 கதிர் 335

## யாழில் கூலிக்கு யாசகம் பெற்றவர்கள் சிக்கினர்!

யாழ்., சாவகச்சேரியில் குழந்தைகளுடன் யாசகம் பெற்றவர்கள் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டனர்.

யாழ்ப்பாணத்திலுள்ள விடுதி ஒன்றின் உரிமையாளர், தென்னிலங்கையைச் சேர்ந்தவர்களை கூலிக்கு அமர்த்தி யாசகம் பெறுகின்றார் என்று அண்மைய நாள்களில் பல்வேறு இடங்களில் கைதுநடவடிக்கை ☞2

# கச்சதீவு திருவிழாவுக்கு 100 பக்தர்களுக்கு அனுமதி



### யாழ். மாவட்ட அரச அதிபர் தெரிவிப்பு

இலங்கை மற்றும் தமிழகத்தைச் சேர்ந்த 100 யாத்திரிகர்களுக்கு கச்சதீவு அந்தோனியார் தேவாலய திருவிழாவில் பங்கேற்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது என யாழ். மாவட்ட அரச அதிபர் கணபதிப்பிள்ளை மகேசன் தெரிவித்தார்.

எதிர்வரும் மார்ச் 11 மற்றும் 12 ஆம் திகதிகளில் கச்சதீவு அந்தோனியார் தேவாலய திருவிழா நடைபெறவுள்ளது.

ஏலவே, குறித்த திருவிழாவுக்கு 500 பக்தர்களை அனுமதிப்பதாக யாழ். மாவட்ட ரீதியாக தீர்மானம் எடுக்கப்பட்டிருந்தது.

எனினும், யாத்திரிகர்கள் எவரையும் அனுமதிப்பதில்லை எனவும், அருட்தந்தைகளின் பங்கேற்புடன் மாத்திரம் திருவிழாவை நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது எனவும், இது குறித்த உத்தரவை அமைச்சரவைக்கு ஜனாதிபதி தெரிவித்தார் எனவும் ☞2

# வாக்காளர் பதிவு அவசியத்தை வலியுறுத்தி சைக்கிள் பேரணி

### யாழ்ப்பாணத்தில் இன்று முன்னெடுப்பு






(இ.கலையமுதன்)

பொதுமக்கள் வாக்காளராகப் பதிவு செய்வதன் அவசியத்தை வலியுறுத்தி விழிப்புணர்வு சைக்கிள் பேரணி யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றது. ☞2

## தலைவர் பிரபாகரன் எங்கே?

### பார்வதியம்மாவிடம் படையினர் ஏன் விசாரித்தனர் எனச் சிவாஜி கேள்வி



பிரபாகரன் கொல்லப்பட்டிருந்தால் எதற்காகப் பிரபாகரனின் தாயாரிடம், 'பிரபாகரன் எங்கு இருக்கின்றார்?' என விசாரணை செய்தீர்கள் என்பதற்கான பதிலையும் கூறவேண்டும். அல்ஜசீரா தொலைக்காட்சிக்கும் பிரபாகரனின் தாயார் இதனைக் கூறியுள்ளார். தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் ☞2

## சிறுமியைத் துஷ்பிரயோகம் செய்த பிக்கு நீதி வேண்டி மக்கள் மாபெரும் போராட்டம்



வட்டவளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வட்டவளை, ஹயிற்றி தோட்டத்திலுள்ள விகாரைக்கு முன்பாக நீதி கோரி இன்று கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

தோட்ட மக்கள், சிறார்கள் என பலர் இப்போராட்டத்தில் பங்கேற்று நீதிக்காக கோஷம் எழுப்பினர்.

வட்டவளை, டெம்பல்ஸ்ட்டோவ் ☞2


## போலி பி.சி.ஆர். அறிக்கை தயாரித்த மூவர் மாட்டினர்!

வெளிநாடுகளுக்குச் செல்வோருக்காகப் போலி பி.சி.ஆர். அறிக்கைகளைத் தயாரித்த மூவர் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

வெல்லம்பிட்டிய, மினுவாங்கொடை மற்றும் களுத்துறை ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 32, 33 மற்றும் 28 வயதுகளையுடைய மூவரே கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

தனியார் வைத்தியசாலை ஒன்றின் பெயரைப் பயன்படுத்தி சந்தேகநபர்கள் போலியாக பி.சி.ஆர். அறிக்கைகளைத் தயாரித்துள்ளமை விசாரணைகளில் தெரியவந்துள்ளது. ☞2

## யாழ்ப்பாணத்தில் பெண் அடித்துக் கொலை



யாழ்ப்பாணத்தில் பெண் ஒருவர் அடித்துக் கொலை செய்யப்பட்டள்ளார் எனப் யாழ்ப்பாணம் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

யாழ்ப்பாணம் சோமசுந்தரம் அவனியூ வீதியில் வீட்டு வேலையில் ஈடுபட்ட ☞2

## சகலரும் கண்ட கனவு பகல் கனவாக மாற்றம்

### அரசை சாடுகின்றார் உதயகுமார் எம்.பி.

ஆட்சிக்கு வரும் போது பலர் பல்வேறு கதைகளைக் கூறினார்கள். அவர் கண்ட கனவு நனவாகின்றது இவர் கண்ட கனவு நனவாகின்றது என்றெல்லாம் சொன்னார்கள். ☞2




# டெங்கு தாண்டவம்!

### 52 நாட்களில் 9,809 நோயாளர்கள் அடையாளம்

இவ்வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் 9 ஆயிரத்து 809 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

தேசிய டெங்கு ஒழிப்புப் பிரிவின் சமூக வைத்திய நிபுணர் அனோஜா வீரசிங்க இதனைத் தெரிவித்தார்.

டெங்கு நுளம்புகளின் பெருக்கத்துக்கு 40 தொடக்கம் 45 வீதம் வரையான கழிவுப் பொருள்களே காரணம் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

எனவே, மக்கள் அனைவரும் சுற்றுச்சூழலைப் பாதுகாப்பாக வைத்திருக்க வேண்டும் எனவும் அவர் கேட்டுக்கொண்டார்.

## சிறுமியைத் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தோட்டத்திலுள்ள சிறுமி ஒருவரை, ஹயிற்றி தோட்டத்தில் உள்ள விகாரையின் பிக்கு, துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தியுள்ளார்.

இது தொடர்பில் பாதிக்கப்பட்ட சிறுமியின் தந்தையால் வட்டவளை பொலிஸ் நிலையத்தில் நேற்று முறைப்பாடு முன்வைக்கப்பட்டுள்ளது. இதையடுத்து சம்பவத்துடன் தொடர்புடைய பிக்கு வட்டவளை பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

அவரை இன்று நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்துவதற்குப் பொலிஸார் நடவடிக்கை மேற்கொண்டனர். பாதிக்கப்பட்ட சிறுமி டிக்கோயா கிளங்கன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்நிலையிலேயே, குறித்த சிறுமிக்கு நீதி கோரியும், ஏனைய சிறார்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறு வலியுறுத்தியும், மேற்படி பிக்குவுக்கு எதிராக உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என அழுத்தம் கொடுத்தும் கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

டெம்பல்ஸ்ட்டோவ் தோட்டத்தில் திரண்ட போராட்டக்காரர்கள், பதாதைகள் தாங்கி, கோஷங்களை எழுப்பியவாறு ஹயிற்றி தோட்டத்துக்குச் சென்றனர். அங்கு விகாரையின் முன் அமர்ந்து போராட்டத்தை முன்னெடுத்தனர். இது தொடர்பில் பொலிஸாரிடமும் வேண்டுகோள் விடுத்தனர்.

இந்தப் பிக்கு இனியும் இப்பகுதிக்கு வேண்டாம். நாம் பிக்குகள் வேண்டாம் எனச் சொல்லவில்லை. இப்படியான பிக்கு வேண்டாம் என்றே கூறுகின்றோம் என்று தோட்ட மக்கள் தெரிவித்தனர்.

## சகலரும் கண்ட கனவு ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆனால், இப்போது எல்லோரும் கண்ட கனவு பகல் கனவாக மாறியுள்ளது.

- இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் தொழிலாளர் தேசிய சங்கத்தின் பிரதித் தலைவருமான எம்.உதயகுமார் தெரிவித்தார்.

கொட்டகலை, போகாவத்தை பகுதியில் முன்னாள் அமைச்சரும் தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான பழனி திகாம்பரம் தலைமையில் நேற்று நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் அங்கு தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்,

மலையகத்தைப் பொறுத்தவரையில் அமைச்சர் திகாம்பரம் அமைச்சராக இருந்தபோது மலையக மக்களுக்கு பாரிய அளவில் சேவை செய்தார். தனி வீடுகளைக் கட்டிக்கொடுத்தார்.

அவர் உரிமைகளைப் பெற்றுக் கொடுத்தார். மக்களுக்குத் தேவையானவற்றைப் பெற்றுக்கொடுத்தார். ஆனால், அதற்குப் பின்னர் ஆட்சிக்கு வந்தவர்கள் ஒரு வீடமைப்புத் திட்டத்தைக்கூட ஆரம்பிக்கவில்லை. மாறாக கனவு கண்டுகொண்டிருக்கின்றார்கள்.

கடந்த காலங்களில் சிறந்த முறையில் சேவையாற்றியதற்காக மலைநாட்டுப் புதிய கிராமங்கள் வீடமைப்பு அமைச்சுக்கு விருது கிடைத்தது. இப்போது விருது வழங்க வேண்டும் என்றால் வேலை செய்யாமைக்காகவே விருது வழங்க வேண்டும்.

இன்று பொருளாதார நெருக்கடி காரணமாக மக்கள் பல்வேறு இன்னல்கள் அனுபவித்துக்கொண்டிருக்கின்றார்கள். மூன்று வேளை சாப்பிட முடியாது மிகவும் துன்பப்படுகின்றார்கள். ஆனால், இன்றுள்ளவர்கள் உல்லாசப் பூங்கா அமைத்துக்கொண்டிருக்கின்றார்கள் - என்றார்.

## போலி பி.சி.ஆர். ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சம்பவம் தொடர்பில் விரிவான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

## தலைவர் பிரபாகரன் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரபாகரன் மரணம் தொடர்பில் அரசும், அரசில் உள்ளவர்களும் மாறுபட்ட கருத்துக்களையே கூறி வருகின்றார்கள். இதன் மூலம் போர்க்குற்றம் நடந்தது என்பதை ஏற்றுக்கொள்கின்றார்கள். இதில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பண்பு தெரியாத வகையில் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் பற்றி வசைபாடியுள்ளார்.

- இவ்வாறு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழ்த் தேசியக் கட்சியின் பொதுச்செயலாளருமான எம்.கே. சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர்கள் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் கட்சியான ஈ.பி.டி.பி. பற்றி பொதுமக்களுக்கு நன்றாகத் தெரியும். அவர் எவ்வளவு படுகொலைகள், அட்டூழியங்கள் புரிந்தார் என்பதும் தெரியும்.

2001ஆம் ஆண்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தேர்தல் பரப்புரைக்காக ஊர்காவற்றுறை சென்றபோது ஈ.பி.டி.பி. குண்டர்களால் சுட்டும் வெட்டியும் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தில் மூவருக்கு இரட்டை மரணதண்டனை தீர்ப்பு வழங்கப்பட்டது.

பிரபாகரன் உயிருடன் சரணடைந்தார் என்று டக்ளஸ் தேவானந்தா கூறுகின்றார். அப்படி என்றால் சரணடைந்தவர்களை நீங்கள் படுகொலை செய்தீர்களா? என்பதற்குப் பதில் கூறவேண்டும். இறுதிப் போரின்போது பிரபாகரனின் சடலம் எனக் காண்பிக்கப்பட்ட படத்தில் நெற்றியில் துப்பாக்கிச்சூட்டுக் காயங்கள் இருந்தமை அடையாளப்படுத்தப்பட்டுள்ளது.

பிரபாகரன் சரணடைந்திருந்தால் விசாரணை செய்திருப்பீர்கள். இலங்கை முழுவதும் பவனியாகக் கொண்டு சென்றிருப்பீர்கள். ஆனால், தற்போது இந்த விடயங்கள் தொடர்பில் ஒன்றுக்கொன்று முரணாகவே கூறிவருகின்றீர்கள். சரணடைந்த பின்னர் கொல்லப்பட்டார் என்பது உங்கள் கருத்து. அவ்வாறு என்றால் இந்தப் போர்க்குற்றத்துக்கு யார் பொறுப்பு? இதற்கு யார் பதில் கூறுவது?

அன்று இராணுவத் தளபதியாக இருந்த சரத் பொன்சேகா, பிரபாகரன் ஒரு போர் வீரன் கடைசி வரை போராடியே மறைந்தார் என்பதைக் கூறுகின்றார். படைத்தளபதியின் கீழ் இருந்த ஓய்வுநிலை ஜெனரல் கமால் குணரட்ண என்பவர், பிரபாகரனின் கழுத்தில் இருந்த இலக்கம் ஒன்று என்ற இலக்கத்தகட்டையும் பிஸ்டலையும் கைப்பற்றினோம் எனக் கூறியுள்ளார். அவ்வாறு என்றால் பிஸ்டலுடனா அவர் சரணடைந்தார். ஆயுதங்கள் இல்லாமல்தான் எதிரியிடம் மண்டியிடுவதையே சரணடைதல் என்பார்கள்.

அவருடைய உடலை நாங்கள் புதைத்துவிட்டோம் என ஒரு சிலர் கூறினார்கள். எங்கு புதைத்தோம்? யார் புதைத்தார்கள்? என்பது கூறப்படவில்லை. இன்னுமொரு பகுதியினர் எரித்துவிட்டு சாம்பலைக் கரைத்துவிட்டோம், எறிந்து விட்டோம் என்றார்கள்.

பிரபாகரனின் உடலை அடையாளம் காண்பதற்காகக் கருணாவையும், தயா மாஸ்ரரையும் கூட்டிச் சென்றீர்கள். ஒருவர் கொல்லப்பட்டால் குறித்த நபர் இந்தியாவாலும் தேடப்படுகின்றார் என்றால் ஏன் அவரின் இறப்பு விசாரணை நடைபெறவில்லை?

ஹெலி மூலம் கருணாவைக் கூட்டிச் செல்ல முடியும் என்றால் ஏன் சட்ட மருத்துவ அதிகாரியைக் கூட்டிச்சென்று இறப்புச் சான்றிதழை வழங்கவில்லை? இந்தியாவுக்கு ஒரு நீதிமன்றச் சான்றிதழை வழங்கியுள்ளீர்கள்.

அன்றைய காலத்தில் பிரபாகரனின் தாயும் தந்தையாரும் பனாகொட இராணுவ முகாமில்தான் தடுத்து வைக்கப்பட்டிருந்தார்கள். அப்படியென்றால் ஏன் டி.என்.ஏ. பரிசோதனை செய்யவில்லை?

பிரபாகரன் எனக் காண்பிக்கப்பட்ட உடலை நாங்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. ஒன்றில் அவர் தன்னைத் தானே மாய்த்திருக்கவேண்டும். அல்லது அவர் உயிருடன் இருக்கின்றாரா? இல்லையா? என்பதை வரலாறு கூறும். அதனை விடுத்து சரணடைந்தார், சடலத்தை எடுத்தோம், புதைத்தோம் என்று கூறுவதில் அர்த்தம் இல்லை.

பிரபாகரன் கொல்லப்பட்டிருந்தால் எதற்காகப் பிரபாகரனின் தாயாரிடம், 'பிரபாகரன் எங்கு இருக்கின்றார்?' என விசாரணை செய்தீர்கள் என்பதற்கான பதிலையும் கூறவேண்டும். அல்ஜசீரா தொலைக்காட்சிக்கும் பிரபாகரனின் தாயார் இதனைக் கூறியுள்ளார். - என்

## வாக்காளர் பதிவு .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இன்று காலை 7.30 மணியளவில் மாவட்ட செயலகம் முன்றலில் இருந்தும், காலை 8 மணியளவில் கொடிகாமம் பஸ் நிலைய முன்றலில் இருந்தும் ஆரம்பித்த விழிப்புணர்வு சைக்கிள் பேரணி சாவகச்சேரி - சங்கத்தானை ரயில் நிலையம் அருகில் வந்து, அங்கிருந்து பேரணி தென்மராட்சி கலாசார மண்டபம் வரை சென்று நிறைவடைந்தது.

அதன்பின்னர் தேர்தல் விழிப்புணர்வு மற்றும் வாக்குரிமை அளித்தல், வாக்காளராகப் பதிவு செய்தல் தொடர்பாக விழிப்புணர்வு நிகழ்வுகளும் நாடகங்களும் இடம்பெற்றன.

இந்த நிகழ்வுகளில் யாழ். மாவட்ட அரச அதிபர் க.மகேசன், மேலதிக அரச அதிபர் பிரதீபன், மேலதிக அரச அதிபர் (காணி) முரளிதரன், மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் அமல்ராஜ், பிரதேச செயலர்கள், மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், கிராம சேவகர்கள், பாடசாலை மாணவர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

பெப்ரவரி முதலாம் திகதி வாக்காளர் தினம் அனுஷ்டிக்கப்படும் நிலையில் இன்று யாழ். மாவட்டத்தில் இந்த நிகழ்வுகள் ஒழுங்கு செய்யப்பட்டன.

## யாழில் கூலிக்கு ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்னெடுக்கப்பட்டது.

அதனடிப்படையில் சாவகச்சேரி நகரில் யாசகம் பெற்றவர்கள் நேற்று கைதுசெய்யப்பட்டனர்.

இவ்வாறு யாசகம் பெறுபவர்களின் பணம் விடுதி உரிமையாளரிடம் ஒப்படைக்கப்பட்டதும் யாசகத்தில் ஈடுபட்டோருக்கு தினக் கூலி வழங்கப்படுகின்றது எனப் பல தரப்பினராலும் குற்றஞ்சாட்டப்பட்டது.

அதனடிப்படையில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## கச்சதீவு திருவிழாவுக்கு ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அண்மையில் தெரிவித்திருந்தார்.

எவ்வாறாயினும், தற்போது, இலங்கை மற்றும் தமிழகத்தைச் சேர்ந்த தலா 50 யாத்திரிகர்களுக்கு மாத்திரம் கச்சதீவு திருவிழாவில் பங்கேற்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது எனவும் யாழ். மாவட்ட அரச அதிபர் மேலும் கூறினார்.

## யாழ்ப்பாணத்தில் .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இளைஞர் ஒருவர் வீட்டின் உரிமையாளர் மீது கோடரியால் தாக்கியுள்ளார் என ஆரம்ப கட்ட விசாரணையில் தெரிய வருகின்றது.

கொலையாளி தப்பியோடிய நிலையில் பொலிஸார் சம்பவ இடத்தில் மேலதிக விசாரணையில் ஈடுபட்டுள்ளனர்.

விளம்பர தொடர்புகளுக்கு
தொலைபேசி இலக்கம்-
076 443 8622



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## உண்மை நிலைவரம் என்ன?

**நாட்டின் பொருளாதார நெருக்கடி – சிக்கல் – மிக மோசமானதும் தாங்க முடியாததுமான கட்டத்தை அடைந்துள்ள இந்த நிலையில், அது தொடர்பாக முக்கியமான அறிக்கை ஒன்றை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்குமாறு பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி கட்சி கோரியிருக்கின்றது.**

**அக்கட்சியின் சார்பில் பொருளாதார விடயங்களைக் கையாளும் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா இந்தக் கோரிக்கையை முன் வைத்திருக்கிறார்.**

**பொருளாதார நெருக்குவாரத்திலிருந்து நாடு மீளுவதற்கு சர்வதேச நாணய நிதியத்திடம் தஞ்சம் புகுவதா, இல்லையா என்ற சர்ச்சை தீவிரமடைந்துள்ள பின்னணியில் இந்தக் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.**

**இலங்கையின் மோசமடைந்துள்ள பொருளாதார நிலைமை தொடர்பில், 'நாட்டு நிலைவர அறிக்கை' ஒன்றை சர்வதேச நாணய நிதியம் தனது நிபுணர்கள் மூலம் விரிவான ஆய்வுகள், தகவல் திரட்டல்களின் பின்னர் தயாரித்துள்ளது.**

**கடன் வழங்கும் நிறைவேற்று சபையின் முக்கிய கூட்டமொன்று வரும் வெள்ளிக்கிழமை வொஷிங்டனில் நடைபெற இருக்கின்றது. அந்தக் கூட்டத்தில் இந்த அறிக்கை சமர்ப்பிக்கப்பட இருப்பதாகவும், இந்த அறிக்கையை இலங்கை அரசு நாடாளுமன்றத்தின் பார்வைக்கு சமர்ப்பிக்க வேண்டும் எனவும் ஹர்ஷ டி சில்வா வலியுறுத்தியிருக்கிறார்.**

**இலங்கை அரசுடன் வழமையான வருடாந்தக் கலந்துரையாடலின் பின்னர், 'சரத்து IV கலந்தாலோசனை அறிக்கை'யை சர்வதேச நாணய நிதியம் தயாரித்துள்ளது.**

**இலங்கை தனது கடன்களை மீளச் செலுத்தும் பேண்தகு நிலையில் உள்ளதா அல்லது நிலைமை கட்டு மீறி சென்று விட்டதா என்பதை இந்த அறிக்கை விவரமாகக் கொண்டிருப்பதாகக் கருதப்படுகிறது.**

**"எங்களுக்குக் கிடைத்த தகவல்களின்படி கடன் மீளச் செலுத்துகை தவணைப்படி மீளச் செலுத்தும் நிலைமை கையை மீறிச் சென்று விட்டது. கடன் செலுத்தும் தவணைகளை திரும்பவும் – மீளவும் – ஒழுங்குபடுத்தி, இலங்கையின் நிலைமைக்குள் – கட்டுக்குள் – அடங்கிய கூடிய மீள் செலுத்துகைக்கான புதிய அட்டவணை ஒன்றைத் தயாரிக்க வேண்டியது இன்றைய கட்டாயம் ஆகும்" – என்றும் ஹர்ஷ டி சில்வாசுட்டிக்காட்டுகின்றார்.**

**இந்த நிலைமையில் வெறுமனே சர்வதேச நாணய நிதியத்திடம் தஞ்சம் புகுவதன் மூலம் மட்டும் நிலைமையை சமாளித்து விட முடியாது.**

**பொருளாதார – அரசியல் தீர்மானங்களையும், முடிவுகளையும், தீர்க்கமான பார்வையுடன் அரசு எடுத்து, அவற்றின் அடிப்படையில் மேற்கொண்டு நட வடிக்கைகளை முன்னெடுத்தல் அவசியம். அத்தகைய தீர்மானம் அரசியல் ரீதியாகவும் ஆராய்ந்து முன்னெடுக்கப்படவேண்டும் என்பதால் இந்த விவகாரம் நாடாளுமன்றத்திலும் பேசப்படவேண்டும் – கலந்தாலோசிக்கப்படவேண்டும் – என்றும் அறிவுறுத்துகின்றார் அவர்.**

**நாட்டின் பொருளாதாரம் பற்றிய இத்தகைய ஒரு முக்கிய மதிப்பீட்டு அறிக்கையை நாடாளுமன்றுக்குக் கூடக் காட்டாமல் மடக்கும் அதிகாரம் மத்திய வங்கிக்கும் திறைசேரிக்கும் இருக்கும் என்றால், அந்த அதிகாரத்தை அப்படி அவர்களுக்கு ஒப்புவித்தவர் யார் என்ற விவகாரமும் ஆராயப்பட வேண்டியதாகின்றது.**

**நாட்டின் பொருளாதார நிலைமை தொடர்பில் உண்மை நிலைவரத்தை ஒளிவு மறைவின்றி வெளிப்படையாக, நாட்டுக்கும் மக்களுக்கும் நாடாளுமன்றத்துக்கும் தெரியப்படுத்தும் கடப்பாடு – பொறுப்பு – அரசுக்கு உண்டு என்பதை நினைவூட்ட விரும்புகிறோம்.**

## உள்நாட்டு தொழிற்துறைகளில் முதலீடுசெய்து இந்த நாட்டைக் கட்டியெழுப்ப ஒன்றிணைக!

### ஜனாதிபதி அழைப்பு



உள்நாட்டுத் தொழிற்துறைகளில் முதலீடுகளைச் செய்து, இந்நாட்டைக் கட்டியெழுப்ப ஒன்றிணையுமாறு, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ உள்நாட்டுத் தொழில் முனைவோருக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

பல்வேறு துறைகளைச் சேர்ந்த தொழில் முனைவோருடன் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே, ஜனாதிபதி மேற்கண்டவாறு அழைப்பு விடுத்தார்.

அபிவிருத்தி வேலைத்திட்டங்களுக்குத் தனியார்துறையினரின் பங்களிப்பைப் பெற்றுக்கொள்ளும் நோக்கத்தில் இந்தக் கலந்துரையாடல் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

அந்நியச் செலாவணியை உருவாக்குதல், அரச நிதிக் கொள்கை, வெளிநாட்டு வேலை வாய்ப்பு மேம்பாடு, முதலீடுகளை ஊக்கு வித்தல், ஏற்றுமதியை மேம்படுத்தல், மீள் புதுப்பிக்கத்தக்க சக்திவலு, விவசாய உற்பத்திகள், போதுமானளவு பசளை விநியோகம், சுற்றுலாத்துறை அபிவிருத்தி உள்ளிட்ட பல துறைகள் தொடர்பிலான கலந்துரையாடல்கள் இடம்பெற்றன.

மீள்புதுப்பிக்கத்தக்க சக்திவலு, பசுமை விவசாயம், தொழில்நுட்பப் பூங்காக்கள், பசுமை இல்லங்கள் உள்ளிட்ட பல துறைகளுக்கான பாரியளவு முதலீட்டுடன் அந்நியச் செலாவணியை நிர்வகிக்கும் பாரிய சந்தர்ப்பம் கிட்டுமென்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

இந்த நாட்டைக் கட்டியெழுப்புவதற்கு உள்நாட்டுத் தொழில்முனைவோர் வழங்கி வரும் ஒத்துழைப்புகளுக்குப் பாராட்டுத் தெரிவித்த ஜனாதிபதி, உலகளாவிய தொற்றுப் பரவல் நிலைமைக்கு முகங் கொடுத்துக்கொண்டே பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப இந்த அரசாங்கம் முயற்சித்து வரும் நிலையில், பலர் தமது குறுகிய நோக்கங்களை அடைவதற்காக முன்னெடுத்து வரும் தவறான எண்ணங்களை, வர்த்தகச் சமூகத்தினரால் மாத்திரமே சரிசெய்ய முடியுமென்றும் குறிப்பிட்டார். கடந்த இரண்டு வருடக் காலப்பகுதியில் நிர்மாணத்துறையில் ஏற்பட்ட மாற்றம் காரணமாக, சீமெந்துக்கான கேள்வி அதிகரித்துள்ளது. இதனால் சீமெந்துக்குப் பற்றாக்குறை நிலவியதெனத் தெரிவித்த அமைச்சர் பஸில் ராஜபக் , எதிர்காலத்தில் நாட்டுக்குள்ளேயே முழுமையான சீமெந்து உற்பத்தியை மேற்கொள்வதற்கு அரசாங்கம் அவதானம் செலுத்தியுள்ளது என்றும் குறிப் பிட்டார்.

அத்தியாவசியப் பொருள்களுக்கான தட்டுப்பாடுகள் எவையும் சந்தையில் காணப்படவில்லை எனத் தெரிவித்த அமைச்சர், மருந்துப்பொருள்கள் தவிர்ந்த பல பொருள்களுக்கான நிர்ணய விலையை நீக்குவதற்கு எடுக்கப்பட்ட தீர்மானத்தைக் கொண்டு தேவையற்ற பயன்களை அடைய முயற்சிக்க வேண்டாமென்று வர்த்தகர்களிடம் கோரிக்கை விடுத்தார்.

கையிருப்புக்கேற்ப எரிபொருள் கொள்வனவை மேற்கொள்வது சவாலாக இருப்பினும், அபிவிருத்திக்கும் தொழிற்துறைகளுக்கும் எவ்வித பாதிப்பும் ஏற்படாத வகையில் எரிபொருள் கையிருப்பைப் பேணுவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதென்று, மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்தார்.

நாட்டின் பொருளாதாரம் தொடர்பில் முன்னெடுக்கப்பட்டு வரும் போலிப் பிரசாரங்கள் காரணமாக, வெளிநாட்டு முதலீட்டு வாய்ப்புகள் இல்லாமல் போகின்றன என்றும் சுட்டிக்காட்டிய மத்திய வங்கியின் ஆளுநர், அனைத்து வெளிநாட்டுக் கடன்களையும் செலுத்த அரசாங்கத்தால் முடியுமென்றும் கடனல்லாத வெளிநாட்டு முதலீடுகளை நாட்டுக்குப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றன என்றும் குறிப்பிட்டார்.

அரசாங்கத்தின் கொரோனா தொற்றொழிப்பு வேலைத்திட்டத்துக்குப் பாராட்டுத் தெரிவித்த தொழில்முனைவோர், அந்த வெற்றி காரணமாகத்தான் தமது வர்த்தகங்களைப் பாதுகாத்துக்கொள்ள முடிந்தது எனத் தெரிவித்தனர்.

பல்வேறு நாடுகள் கொரோனாத் தொற்றுப் பரவலைக் கட்டுப்படுத்த முடியாமல் போனதால், அந்நாடுகள் பலவற்றுக்குக் கிடைக்கவிருந்த பல வாய்ப்புகள் இலங்கைக்குக் கிடைக்கப்பெற்றுள்ளன என்றும் அவர்கள் குறிப்பிட்டனர்.

## இலங்கையின் உண்மையான நண்பன் சீனா என்கிறார் விமல்!

சீனா இலங்கையின் உண்மையான நண்பன் என்றே தான் கருதுகிறேன் என கைத்தொழில் அமைச்சர் விமல் வீரவன்ஸ தெரிவித்துள்ளார். அண்மையில் இடம்பெற்ற நிகழ்வில் கருத்துத் தெரிவித்த அவர், இலங்கைக்கு உதவிகளை வழங்குவதற்கு சீனா எந்த அரசியல் நிபந்தனையையும் முன்வைத்ததில்லை எனக் கூறினார்.மேலும் சீனா மற்றும் இலங்கைக்கு வரலாற்று ரீதியாக தொப்புள் கலாசாரத் தொடர்புகள் இருக்கின்றன எனவும் அவர் சுட்டிக்காட்டினார். யுத்த காலத்தில் அவர்களின் உதவி இல்லையெனில் சர்வதேசத் தடைகளை இலங்கை எதிர்கொண்டிருக்கும் என்றும் விமல் வீரவன்ஸ தெரிவித்தார்.

## பூநகரி – முட்கொம்பன் ஆகிய பகுதிகளில் காணிகள் ஆக்கிரமிக்கப்படுகின்றனவாம்!

### மக்கள் விசனம்

கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட வன்னேரிக்குளம், குஞ்சுக்குளம், ஆனைவிழுந்தான் மற்றும் பூநகரி - முட்கொம்பன் ஆகிய பகுதிகளில் வனவளத் திணைக்களத்தால் தங்களது காணிகள் தொடர்ந்தும் ஆக்கிரமிக்கப்பட்டு எல்லையிடப்படுகின்றன என பாதிக்கப்பட்ட பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சி, கண்டாவளை, பூநகரி, பச்சிலைப்பள்ளி ஆகிய பகுதிகளில் கடந்த காலங்களில் பொது மக்கள் பயன்படுத்திய பயிர்ச்செய்கை காணிகள், தனியார் காணிகள் வனவளத் திணைக்களத்தால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன.

குறிப்பாக நூற்றாண்டு காலம் பழைமை வாய்ந்த மிகப் பழம் பெரும் கிராமங்களான குஞ்சுக்குளம் திக்காய் மண்ணியா குளம் ஆகிய பகுதிகளில் பொதுமக்களுக்குச் சொந்தமான 400 ஏக்கருக்கும் மேற்பட்ட நிலப்பகுதிகள் வனவளத்திணைக்களத்தால் எல்லையிடப்பட்டுள்ளன.

இவ்வாறு எல்லையிடப்பட்ட தமது காணிகளை விடுவித்து தருமாறு பிரதேச விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதேபோன்று பூநகரி பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட முட்கொம்பன் பகுதியிலும் வனவளத்திணைக்களத்தால் பொதுமக்கள் பயன்பாட்டில் பயிர்ச்செய்கைமேற்கொள்ளும் காணிகள் எல்லையிடப்பட்டுள்ளன.

இவ்வாறு வனவளத்திணைக்களம் ஆக்கிரமித்துள்ள மேற்படி காணிகளை விடுவிப்பதற்குநடவடிக்கைஎடுக்கவேண்டும் என்றும் பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# புடின் - பைடன் நேரடிப் பேச்சு ஏற்பாடு செய்தது பிரான்ஸ்!



உக்ரைன் நெருக்கடி குறித்து விவாதிக்க ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினைச் சந்தித்து பேச்சு நடத்த அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் கொள்கையில் இணக்கம் தெரிவித்துள்ளார். ரஷ்யா தனது அண்டை நாடான உக்ரைன் மீது படையெடுக்கும் நோக்கத்தைக் கைவிட்டால் பிரான்ஸ் முன்மொழிந்த இந்தப் பேச்சு நடைபெறும் என வெள்ளை மாளிகை தெரி வித்துள் ளது.

புடின் - பைடன் இடையிலான இந்தச் சந்திப்பு இடம்பெற்றால் பல தசாப்தங்களின் பின்னர் ஐரோப்பாவில் ஏற்பட்டுள்ள மோசமான பாதுகாப்பு நெருக்கடியில் ஒன்றிற்கு சாத்தியமான இராஜதந்திர தீர்வை எட்ட முடியும் என சர்வதேச அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர். உக்ரைன் மீது ரஷ்யா இராணுவ நடவடிக்கையை தொடங்கத் தயார் நிலையில் இருப்பதாக உளவுத்துறை தகவல்களை மேற்கோள்காட்டி அமெரிக்க அதிகாரிகள் கூறுகின்றனர். ஆனால் இக்குற்றச்சாட்டை ரஷ்யா மறுத்து வருகிறது. இந்நிலையில் உக்ரைன் - ரஷ்யா நெருக்கடிக்கு தீர்வு காணும் முயற்சியில் பிரான்ஸ் ஜனாதிபதி இம்மானுவேல் மக்ரோன் தீவிரமாக ஈடுபட்டுள்ளார்.

ரஷ்ய ஜனாதிபதி புடின் - மக்ரோன் இடையே பதற்றத்தைத் தணிக்கும் முயற்சியாக நேற்று தொலைபேசி ஊடாக பேச்சு இடம்பெற்றது. சுமார் 3 மணி நேரங்கள் இந்தப் பேச்சு நீடித்தது. இதன் தொடர்ச்சியாக ரஷ்ய நேரப்படி இன்று அதிகாலை மக்ரோன் - புடின் இடையே இரண்டாம் கட்ட தொலைபேசி உரையாடல் இடம்பெற்றது.

இதனைத் தொடர்ந்தே ரஷ்ய - அமெரிக்க தலைவர்களுடனான உயர்மட்டப் பேச்சுக்கான முன்மொழிவை மக்ரோன் வெளியிட்டார்.

இதற்கிடையே அமெரிக்க வெளியுறவு அமைச்சர் அண்டனி பிளிங்கன் மற்றும் ரஷ்ய வெளியுறவு அமைச்சர் செர்ஜி லாவ்ரோவ் ஆகியோருக்கு இடையோருக்கு இடையில் வியாழக்கிழமை பேச்சு இடம்பெறவுள்ளது.

இப்பேச்சின்போதும் புடின் - பைடன் இடையிலான சந்திப்புக்கான சாத்தியங்கள் குறித்து விவாதிக்கப்படும் என பிரெஞ்சு ஜனாதிபதி மக்ரோன் அலுவலகம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, உக்ரைன் மீதான முழு அளவிலான தாக்குதலுக்கான தயாரிப்புகளை மிக விரைவில் ரஷ்யா முன்னெடுத்து வருவது போன்று தோன்றுவதாக வெள்ளை மாளிகை நேற்று விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அவ்வாறு ஆக்கிரமிப்பு முயற்சி இடம்பெற்றால் அதன் விளைவுகளை ரஷ்யா எதிர்கொள்ளும் எனவும் அதில் கூறப்பட்டுள்ளது.

கிழக்கு உக்ரைன் அருகே டொனெட்ஸ்க் மற்றும் லுஹான்ஸ்க் பகுதிகளில் ரஷ்ய ஆதரவு கிளர்ச்சியாளர்கள் உட்பட உக்ரைனைச் சுற்றி 190,000 துருப்புக்களை ரஷ்யா குவித்துள்ளதாக பைடன் நிர்வாகம் மதிப்பிடுகிறது.

இதற்கிடையில் உக்ரைன் எல்லைக்கு அருகில் ரஷ்யா தனது கவச வாகனங்கள் மற்றும் துருப்புக்களை குவித்துபோருக்கானதயார்படுத்தல்களைமுன்னெடுத்து வருவது போன்று தோற்றமளிக்கும் புதிய செயற்கைக்கோள் படங்களை அமெரிக்க தனியார் நிறுவனமான மாக்சர் (Maxar Technologies) ஞாயிற்றுக்கிழமை வெளியிட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.



## எல்லைகளை திறக்கிறது இஸ்ரேல்

## கொவிட் தடுப்பூசி போடாத பயணிகளுக்கும் அனுமதி!

கொவிட் தொற்று நோயை அடுத்து மூடப்பட்டிருந்த இஸ்ரேல் எல்லைகள் அனைத்து சுற்றுலா பயணிகளுக்கும் மார்ச் 01 முதல் திறக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

தடுப்பூசி போட்டுக் கொள்ளாதவர்களும் அதன் பின்னர் நாட்டுக்கு வர முடியும் என பிரதமர் நப்தலி பென்னட் மற்றும் சுகாதார அமைச்சர் நிட்சன் ஹொரோவிட்ஸ் ஆகியோர் இணைந்து வெளியிட்ட கூட்டறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் அனைத்து சுற்றுலாப் பயணிகளும் புறப்படும் போதும் இஸ்ரேலில் தரையிறங்கிய பின்னரும் இரண்டு பி.சி.ஆர். பரிசோதனைகளுக்கு முகம் கொடுக்க வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

வெளிநாடுகளில் உள்ள இஸ்ரேலியர்கள் விமானத்தில் ஏறும் முன் அன்டிஜன் பரிசோதனை செய்ய வேண்டும் என்ற நிபந்தனை இரத்து செய்யப்பட்டது. மாறாக, நாட்டில் தரையிறங்கியதும் அவர்களுக்கு பி.சி.ஆர். பரிசோதனை கட்டாயமாக இருக்கும். இதில் தொற்றில்லை என உறுதிப்படுத்தப்பட்டால் அவர்கள் வீடுகளுக்கு செல்ல முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது, தடுப்பூசி போடப்பட்ட சுற்றுலாப் பயணிகள் மட்டுமே நாட்டிற்குள் நுழைய இஸ்ரேல் அனுமதி வழங்கி வருகிறது.

மார்ச் 2020 இல் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்குள் நுழைவதை இஸ்ரேல் தடைசெய்தது. பின்னர் கட்டுப்பாடுகளை தளர்த்தியது.

எனினும் 2021 இன் பிற்பகுதியில் ஒமிக்ரோன் தொற்று பரவலை அடுத்து மீண்டும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்கு தடை விதிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## 70 ஆண்டு ஆட்சி நிறைவை கொண்டாடும் மகாராணிக்கு கொரோனாத் தொற்று உறுதி



95 வயதான பிரித்தானிய மகாராணி எலிசெபத், கொரோனாத் தொற்றுக்கு உள்ளாகியுள்ளார் என பக்கிங்ஹாம் அரண்மனை தெரிவித்துள்ளது. லேசான குளிர் போன்ற அறிகுறிகள் அவருக்கு காணப்படுகின்றன எனவும், ராணிக்கு கொரோனாத் தொற்று இருப்பது உறுதிசெய்யப்பட்டுள்ளதாகவும், இந்த வாரம் விண்ட்சரில் தனது கடமைகளைத் தொடர்வார் என எதிர் பார்க்கப்படுவதாகவும் அரண்மனை அறிவித்துள்ளது.

சிம்மாசனத்தின் வாரிசான இளவரசர் சார்ள்ஸ் இரண்டாவது முறையாக கொவிட்க்கு நேர்மறை சோதனை செய்த வாரத்தில் இளவரசர் சார்ல்ஸுடன் ராணி நேரடி தொடர்பில் இருந்துள்ளார் என தெரிவிக்கப்படுகிறது.

பிரிட்டனை நீண்ட காலம் ஆட்சி செய்த மன்னரான ராணி, 70 ஆண்டுகள் அரியணையில் அமர்ந்து தனது வரலாற்று சிறப்புமிக்க பிளாட்டினம் விழாவை அடைந்த சில வாரங்களில் இந்த அறிவிப்பு வெளியாகி உள்ளது. இதேவேளை மகாராணியார் மூன்று முறை தடுப்பூசியை பெற்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## இங்கிலாந்தில் முடிவுக்கு வரும் சுய தனிமைப்படுத்தல் சட்டம்




இங்கிலாந்தில் அமுலில் உள்ள சுய தனிமைப்படுத்தல் சட்டம் அடுத்த வாரம் முதல் கைவிடப்படும் என எதிர் பார்க்கப்படுகிறது நாட்டில் மீதமுள்ள அனைத்து வைரஸ் கட்டுப்பாடுகளும் எதிர்வரும் நாள்களில் முடிவடையும் என டவுனிங் ஸ்ட்ரீட் அறிவித்துள்ளது.

தற்போது, தொற்று உறுதியான அல்லது அறிகுறி காட்டும் நோயாளர்கள் 10 நாள்கள் வரை தனிமைப்படுத்தப்பட வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது.

# நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தலில் பாரிய வெற்றி முதலமைச்சர் ஸ்டாலினுக்கு தி.மு.கவினர் வாழ்த்து



தமிழகம் முழுவதும் நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தல் வாக்கு எண்ணிக்கை நடைபெற்றுவரும் நிலையில், இதுவரை வந்துள்ள முடிவுகளின்படி தி.மு.க. மிகப் பெரிய அளவில் வெற்றியைப் பெற்றுள்ளது.

அ.தி.மு.க., பா.ஜ.க., பா.ம.க., நாம் தமிழர் உள்ளிட்ட கட்சிகள் ஆங்காங்கே வெற்றியை பதிவு செய்து வருகின்றன.

தி.மு.கவின் வெற்றியை அடுத்து சென்னையில் உள்ள அக்கட்சியின் தலைமை அலுவலகமான அண்ணா அறிவாலயத்தில் குவிந்த தொண்டர்கள் பட்டாசுகளை வெடித்து ஆடிப்பாடி வெற்றியைக் கொண்டாடினர்.

முதலமைச்சரும், தி.மு.க. தலைவருமான மு.க.ஸ்டாலினை சென்னையில் உள்ள முகாம் அலுவலகத்தில், தி.மு.க. முக்கிய நிர்வாகிகள் சந்தித்து உள்ளாட்சித் தேர்தல் வெற்றிக்கு வாழ்த்துத் தெரிவித்தனர்.

மாநில நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆ.ராசா, தயாநிதி மாறன், தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றத் தலைவர் வாகை சந்திரசேகர் ஆகியோர் மு.க.ஸ்டாலினை சந்தித்து பொன்னாடை அணிவித்து மகிழ்ச்சியை பகிர்ந்து கொண்டனர்.

## மாட்டுத் தீவன ஊழல் தொடர்பான ஐந்தாவது வழக்கில் லாலு பிரசாத் யாதவுக்கு ஐந்தாண்டு சிறைத்தண்டனை



ராஷ்ட்டிரிய ஜனதா தளக் கட்சியின் தலைவரான லாலு பிரசாத் யாதவ் ஒருங்கிணைந்த பீகார் மாநிலத்தில் 1990 முதல் 1997 வரையில் முதலமைச்சராக இருந்த காலத்தில், கால்நடைகளுக்கு தீவனம் வாங்கிய நடவடிக்கைகளில் ஊழல் நடந்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டது. இவ்வாறு 950 கோடி ரூபா அளவுக்கு மோசடி நடந்துள்ளதாக தெரியவந்தது.

1996 ஆம் ஆண்டு கால்நடைத் தீவன ஊழல் வெளிச்சத்துக்கு வந்ததையடுத்து, அது தொடர்பாக சி.பி.ஐ. வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தியது. லாலு பிரசாத் யாதவ், பீகார் மாநில மற்றொரு முன்னாள் முதலமைச்சர் ஜெகநாத் மிஸ்ரா, முன்னாள் எம்.பி. ஜெகதீஷ் சர்மா, அப்போதைய கணக்குக் குழுத் தலைவர் துருவ் பகத், கால்நடைத் துறை உதவி இயக்குநர் கே.எம். பிரசாத் உள்ளிட்டோர் மீது வழக்குகள் பதிவு செய்யப்பட்டன.

இந்த வழக்குகளின் விசாரணைகள் ஜார்க்கண்ட் மாநிலம் ராஞ்சியில் உள்ள சி.பி.ஐ. சிறப்பு நீதிமன்றத்தில் நடைபெற்று வருகின்றன. தும்கா, தியோகர், சாய்பசா ஆகிய கருவூலங்களில் நடந்த ஊழல் தொடர்பான 4 வழக்குகளிலும் லாலு பிரசாத் யாதவ் குற்றவாளியாக அறிவிக்கப்பட்டார்.

அவருக்கு 14 ஆண்டுகள் சிறைத் தண்டனையும், 60 லட்சம் ரூபா அபராதமும் விதிக்கப்பட்டது. இதில் 7 வருடத் தண்டனை அவருக்கு முடிந்து விட்ட நிலையில், தற்போது லாலு பிரசாத் யாதவ் உடல் நலக்குறைவு காரணமாக பிணையில் வெளியே வந்துள்ளார்.

அவர் டோரண்டா கருவூலத்தில் இருந்து 139.5 கோடி ரூபா பணத்தை முறைகேடாகஎடுத்த வழக்கு ராஞ்சியில் உள்ள சி.பி.ஐ. சிறப்பு நீதிமன்றில் நடைபெற்றுவந்தது. இந்த வழக்கில் லாலு பிரசாத் யாதவ் உள்ளிட்ட 75 பேரை குற்றவாளியாக அறிவித்து ராஞ்சி சி.பி.ஐ. சிறப்பு நீதிமன்றம் கடந்த 15 ஆம் திகதி தீர்ப்பு வழங்கியது.

இந்தவழக்கில்குற்றவாளியாகஅறிவிக்கப்பட்ட லாலு பிரசாத் யாதவ் உள்ளிட்டோரின் தண்டனை விவரத்தை சி.பி.ஐ. சிறப்பு நீதிமன்றம் நேற்று அறிவித்தது. அப்போது நீதிபதி, லாலு பிரசாத் யாதவுக்கு ஐந்தாண்டு சிறைத்தண்டனையும் 60லட்சரூபா அபராதமும் விதித்து உத்தரவிட்டார்.

லாலு பிரசாத் யாதவுக்கு 2013 ஆம் ஆண்டு கால்நடைத் தீவன வழக்கில் முதல் தண்டனை வழங்கப்பட்டது. சாய்பசா கருவூலத்தில் 37.67 கோடி ரூபா ஊழல் செய்த வழக்கில் 5 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. 89.27 லட்சம் ரூபா தியோகர் மோசடி வழக்கில் மூன்றரை ஆண்டுகள் தண்டனை 2017 ஆம் ஆண்டு வழங்கப்பட்டது.

சாய்பசா கருவூலத்தில் 33.67 கோடி ஊழல் செய்த மற்றொரு வழக்கில் 2018 ஆம் ஆண்டு 5 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. அதே ஆண்டில் நான்காவதாக தும்கா ஊழல் வழக்கில் 14 ஆண்டுகள் சிறைத் தண்டனையும், 60 லட்சம் ரூபா அபராதமும் விதிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.




## நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தல் தி.மு.க.முன்னிலையில்

மதியம் வரையில்

தமிழ்நாட்டில் நடந்து முடிந்த நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தலின் வாக்கு எண்ணிக்கை இன்று காலை 8 மணிக்கு ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது. இன்றைய மதிய நிலைவரப்படி தமிழகத்தின் ஆளுங்கட்சியான தி.மு.கவும் பெருவாரியாக அனைத்துக் களத்திலும் முன்னிலையில் இருந்தது.

மாநகராட்சிகளைப் பொறுத்தவரை, 21 மாநகராட்சிகளில், 21 இடங்களிலுமே தி.மு.க. தான் முன்னிலையிலிருந்தது. நகராட்சிகளைப் பொறுத்தவரை, 138 நகராட்சிகளில், 128 இடங்களில் தி.மு.கவும், 6 இடங்களில் அ.தி.மு.கவும், 4 இடங்களில் பிற கட்சிகளும் முன்னிலை பெற்றிருந்தன. பா.ஜ.க., பா.ம.க., நா.த.க., ம.நீ.ம., தே.மு.தி.க. மற்றும் அ.ம.மு.க. ஆகிய கட்சிகள் எந்த இடத்திலும் முன்னிலையில் இருக்கவில்லை.

பேரூராட்சிகளைப்பொறுத்தவரை, மொத்தம் 489 பேரூராட்சிகளில் 358 இடங்களில் தி.மு.க. முன்னிலையில் இருந்தது. 24 இடங்களில் அ.தி.மு.கவும், 3 இடங்களில் பா.ம.க., 2 இடங்களில் பா.ஜ.க., தலா ஒவ்வொரு இடங்களில் நா.த.க., அ.ம.மு.க. முன்னிலை பெற்றிருந்தன.

## உள்ளாட்சித் தேர்தலை நாங்கள் நடத்தவில்லை அண்ணாமலைக்கு இந்திய தேர்தல் ஆணையம் பதில்



உள்ளாட்சித் தேர்தலை நாங்கள் நடத்தவில்லை. தேர்தல் குறித்த புகார்களை நீங்கள் மாநில தேர்தல் ஆணையத்திடம் தெரிவிக்க வேண்டும், என பா.ஜ.க. மாநிலத் தலைவர் அண்ணாமலைக்கு இந்தியத் தேர்தல் ஆணையம் பதில் அளித்துள்ளது.

நடந்து முடிந்த நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தல் எந்தத் தடங்கலும் இல்லாமல் நடந்து முடிந்ததாக தி.மு.க. அரசு கூறிவரும் நிலையில், வாக்குப்பதிவு நாளில் தமிழகத்தில் நடைபெற்ற முறைகேடுகள் மற்றும் அதிகார துஷ்பிரயோகங்களை காணொலி காட்டுகிறது. தேர்தல் ஆணையம் வாக்கு எண்ணிக்கை தினத்திலாவது தனது கண்களை மூடிக் கொண்டிருக்காமல் கவனமாக இருக்க வேண்டும், என தனது டுவிட்டரில் குறிப்பிட்டிருந்தார். மேலும் அதில் இந்திய மத்திய தேர்தல் ஆணையத்தை இணைப்புச் செய்திருந்தார்.

உள்ளாட்சித் தேர்தல் குறித்து பா.ஜ.க. தலைவர் அண்ணாமலையின் அந்தப் புகாருக்கு இந்திய தேர்தல் ஆணையம் விளக்கம் அளித்துள்ளது.

ஊரக மற்றும் நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தலை இந்திய தேர்தல் ஆணையம் நடத்துவதில்லை. நீங்கள் அணுகவேண்டியது எங்களை அல்ல. அது தொடர்பான புகார்களுக்கு மாநில தேர்தல் ஆணையத்தை அணுகவும், என அறிவுறுத்தியிருக்கிறது.

## உணவுப் பற்றாக்குறை குறித்து விழிப்புணர்வு ஐ.நா. அமைப்புடன் ஈஷா புரிந்துணர்வு ஒப்பந்தம்




இந்தியாவில் உணவு மற்றும் ஊட்டச்சத்து பாதுகாப்பு குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தவும், அதுகுறித்து களப்பணி மற்றும் கலந்துரையாடல்களை நடத்தவும் ஈஷா அவுட்ரீச் அமைப்புடன் ஐ.நாவின் உலக உணவு அமைப்பு புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொண்டுள்ளது. இந்த அமைப்பு 2020 ஆம் ஆண்டு அமைதிக்கான நோபல் பரிசை பெற்ற பெருமைக்குரியது என்பது குறிப்பிடத்தக்கது. இந்த நிகழ்வு தொடர்பாக ஈஷா அறக்கட்டளை நிறுவநர் சத்குரு ஊடகங்களுக்குத் தகவல் வழங்கினார். அப்போது அவர், ஐ.நா. அமைப்புகளும் உலகில் உள்ள ஒவ்வொரு பொறுப்பான விஞ்ஞானிகளும் இப்போது இருக்கும் மண் வளத்தை கொண்டு அடுத்த 45 முதல் 50 ஆண்டுகளுக்கு மட்டுமே உணவு உற்பத்தி செய்ய முடியும் என மிகத் தெளிவாகக் கூறுகின்றனர். 2045 ஆம் ஆண்டு நம்முடைய உலக மக்கள் தொகை 930 கோடியாக அதிகரிக்கும் எனவும், அதேசமயம், உணவு உற்பத்தி இப்போது இருப்பதை விட 40 சதவீதம் குறைந்து விடும் எனவும் எச்சரிக்கின்றனர். அடுத்த 25 ஆண்டுகளில் உணவுப் பற்றாக்குறையால் ஏற்படவுள்ள விளைவுகள் என்பது கற்பனை செய்ய முடியாத வகையில் இருக்கும். அவ்வாறு உணவுத் தட்டுப்பாடு ஏற்பட்டால் உள்நாட்டுப் போர் மூளும். இத்தகைய அவலமான நிலையை நம் குழந்தைகள் நிச்சயம் சந்திக்கக் கூடாது, எனத் தெரிவித்துள்ளார்.

புதுடெல்லியில் நடந்த சந்திப்பில் ஐ.நாவின் உலக உணவு அமைப்பின் இந்தியப் பிரதிநிதி பிஷோ பரஜுலி மற்றும் ஈஷா அவுட்ரீச் அமைப்பின் இயக்குநர் மௌமிதா சென் ஆகிய இருவரும் இந்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர்.

# கோணவத்தை ஆற்றுக்கரைக் காணிகளை அடாத்தாகப் பிடிக்கும் செயற்பாடு மும்முரம்

## தடுக்கும் நடவடிக்கைகளில் அதிகாரிகள்

அட்டாளைச்சேனை, கோணவத்தை ஆற்றுக்கு ஒதுக்கப்பட்டுள்ள அரச காணியை அடாத்தாகப் பிடித்து வைத்திருப்பவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று அம்பாறை மாவட்ட மேலதிக அரச அதிபர் வீ. ஜெகதீசன் தெரிவித்தார். இப்படிக் காணி பிடித்துள்ளமையைத் தடை செய்வதற்கு அம்பாறை மாவட்ட ஒருங்கிணைப்பு அபிவிருத்திக் குழுக் கூட்டத்தின் தீர்மானத்துக்கமைய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

இந்தத் தீர்மானத்துக்கமைய பிராந்திய நீர்ப்பாசன பணிப்பாளர், கரையோரம் பேணல்திணைக்களத்தின்பொறியியலாளர், அட்டாளைச்சேனை பிரதேச செயலாளர், நீர்ப்பாசனப் பணிப்பாளர், நில அளவை திணைக்களத்தின் பணிப்பாளர், அனர்த்த முகாமைத்துவ மாவட்ட உதவிப் பணிப்பாளர், பிரதேச சபை தவிசாளர் ஆகியோர் நேரடியாகக் களவிஜயம் மேற்கொண்டு சம்பந்தப்பட்ட பிரதேசங்களைப் பார்வையிட்டனர்.

அண்மைக்காலமாக ஆற்றின் இரு மருங்கிலுமுள்ள அரச காணிகளைப் பொதுமக்கள் அடாத்தாகப் பிடித்து எல்லையிட்டு மண் நிரப்பி வருகின்றமையைக் காண முடிகின்றது.

இதனால் இயற்கை அனர்த்தங்களின்போது ஏற்படக்கூடிய சேதங்கள் அதிகரிக்கக்கூடிய சூழ்நிலை ஏற்படும் என்றும் அம்பாறை மாவட்ட மேலதிக அரச அதிபர் கூறினார். அடாத்தாகக் காணிகளைப் பிடித்திருப்போர் உடனடியாக அவற்றை விடுவிக்க வேண்டும் எனவும், தவறும்பட்சத்தில் அவர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். அந்தப் பிரதேசங்களில் கண் காணிப்பு நடவடிக்கைகளில் கிராம சேவையாளர்களை ஈடுபடுத்துமாறும் பிரதேச செயலாளரை அவர் கேட்டுள்ளார்.



## அட்டப்பள்ளம் கடற்பகுதியில் காணாமல் போன இளைஞர்

(வி.ரி.சகாதேவராஜா)

நிந்தவூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அட்டப்பள்ளம் கடற்கரை பிரதேசத்திற்கு நீராடச் சென்ற இளைஞன் கடலில் மூழ்கி காணாமல் போயுள்ளார்

இச்சம்பவம் நேற்று மாலை 4 மணி அளவில் இடம் பெற்றுள்ளதாக தெரியவருகின்றது.

தனது நண்பருடன் கடற்கரைப் பிரதேசத்திற்கு சென்ற குறித்த இளைஞன் மது அருந்திய நிலையில் கடலில் நீராடுவதற்காக சென்றபோது நீரில் மூழ்கி காணாமல் போயுள்ளார் எனத் தெரியவருகின்றது.



## ரயிலில் மோதி பெண் ஒருவர் சந்திவெளியில் உயிரிழப்பு!

மட்டக்களப்பிலிருந்து கொழும்பு நோக்கிச் சென்று கொண்டிருந்த ரயிலில் மோதி பெண்ணொருவர் மரணித்துள்ளார் என சந்திவெளி பொலிஸார் தெரிவித்தனர்.

இச் சந்திவெளி பகுதியில் வைத்து நேற்று முன்தினம் இரவு 8.30 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

மரணமடைந்துள்ள பெண் தொடர்பான விவரங்கள் கிடைக்கப்பெறவில்லை என்றும், அவர் 40 வயது மதிக்கத்தக்கவர் என்றும் பொலிஸார் நேற்றுத் தெரிவித்தனர்.

பெண்ணின் உடல், வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் விபத்தா அல்லது தற்கொலையா எனும் கோணத்தில் சந்திவெளி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

## ஆயித்தியமலை தூய சதா சகாய அன்னையின் மாசி திருவிழா கொடியிறக்கத்துடன் நிறைவு

(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

மட்டக்களப்பு மறைமாவட்டத்தின் பிரசித்திபெற்ற திருத்தலமான ஆயித்தியமலை தூய சதா சகாய அன்னையின் மாசி மாத திருவிழா நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை கொடியிறக்கத்துடன் நிறைவு பெற்றது.



தூய சதாசகாய அன்னையின் திருத்தலத்தின் மாசி மாத திருவிழா கடந்த 16 ஆம் திகதி பங்குத்தந்தை அருட்பணி இருதயநாதன் ஜெமில்டன் அடிகளார் தலைமையில் கொடி ஏற்றத்துடன் ஆரம்பிக்கப்பட்டதனைத் தொடர்ந்து நவநாட் திருவிழா வழிபாடுகள் இடம்பெற்றன.



கடந்த 19 ஆம் திகதி சனிக்கிழமை காலை மறைமாவட்ட குருமுதல்வர் அருட்பணி அலெக்ஸ் றொபட் அடிகளார் தலைமையில் நற்கருணை மற்றும் உறுதிப்பூசுதல் திருச்சடங்கு திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது. அன்றைய தினம் மாலை நற்கருணை எழுந்தேற்றம் அருட்பணி ரமேஷ் கிறிஸ்டி அடிகளாரினால் வழிநடாத்தப்பட்டிருந்தது.



அன்னையின் திருவிழா கூட்டுத் திருப்பலி அருட்பணி லெபோன் சுதன் அடிகளார் தலைமையில் ஒப்புக்கொடுக்கப்பட்டதனைத் தொடர்ந்து, அன்னையின் திருச் சொரூபத்தினை தாங்கியவண்ணம் ஆலயத்தின் உள்வீதி வலம்வரப்பட்டது. அடுத்து, அன்னையின் ஆசீரைத் தொடர்ந்து, பங்குத்தந்தை இருதயநாதன் ஜெமில்டன் மற்றும் பங்கு மக்களால் கொடியிறக்கம் நிகழ்வு இடம்பெற்று இவ்வருட மாசிமாத திருவிழா நிறைவுபெற்றது.

கொவிட் சூழ்நிலையினைக் கருத்திற்கொண்டு மட்டுப்படுத்தப்பட்ட அளவிலான குருக்கள் மற்றும் துறவியர்கள் அடங்கலான பக்தர்களின் பிரசன்னத்துடன் இவ்வாண்டு ஆலய திருவிழா இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மாணவர் வெளியேற்று விழா

(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

மட்டக்களப்பு, பெப்.22

மட்டக்களப்பு மாவட்ட மீராவோடை கிராமத்தில் தாருல் ஹுதா முன்பள்ளியின் 31ஆவது மாணவர் வெளியேற்று விழா அதன் நிர்வாகத் தலைவர் எம்.எல்.எம்.சலாஹுதீன் தலைமையில் வெகு விமரிசையாக நடைபெற்றது.

இந்நிகழ்வின் பிரதம அதிதியாக கோறளைப் பற்று மேற்கு பிரதேச சபையின் தவிசாளர் ஏ.எம். நௌபர் கலந்து சிறப்பித்தார்.

விசேட அதிதியாக பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் சாஜஹான் உள்ளிட்ட சிவில் சமூக அமைப்புக்களின் பிரதிநிதிகள் பலரும் கலந்து கொண்டனர். இதன் போது மாணவர்களின் விசேட கலை,கலாசார நிகழ்வுகள் பலரது கவனத்தையும் ஈர்த்தமையுடன் தவிசாளரின் சொந்த நிதியிலிருந்து இம் மாணவர்களுக்கான நினைவுப் பரிசில்களும் வழங்கி வைக்கப்பட்டன.





காலைக்கதிர்
Kalaikkathir மாலைப்பதிப்பு



# இந்திய அணியுடனான ரி-20 தொடர் இலங்கை வீரர்கள் விவரம் வெளியானது



இந்திய அணிக்கெதிரான ரி-20 கிரிக்கெட் தொடரில் விளையாடவுள்ள இலங்கை அணி விவரம் இலங்கை கிரிக்கெட் அணி தெரிவுக் குழுவினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

தசுன் சானக தலைமையிலான 18 பேர் கொண்ட இந்த அணியில், அதிரடித் துடுப்பாட்ட வீரரான பானுக ராஜபக்ஷவுக்கு இடம் வழங்கப் படவில்லை.

இந்த அணியில், தசுன் சானக, பத்தும் நிஸங்க, குசல் மெண்டிஸ், சரித் அசலங்க, தினேஷ் சந்திமால், தனுஷ்க குணதிலக்க, கமில் மிஸ்ரா, ஜனித் லியனகே, வனிந்து ஹசரங்க, சமிக்க கருணாரத்ன, துஷ்மந்த சமீர, லஹிரு குமார, பினுர பெர்னாண்டோ, ஷிரான் பெர்னாண்டோ, மகேஷ் தீக்ஷன, ஜெப்ரி வண்டர்செய், பிரவீன் ஜெயவிக்ரம, அஷியன் டானியல் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

உபாதைக்குள்ளாகியுள்ள அவிஷ்க பெர்னாண்டோ, நுவான் துஷார மற்றும் ரமேஷ் மெண்டிஸ்ஆகியோர்இத்தொடருக்குமுன்னதாக குணமடையும்பட்சத்தில்இவர்களும்அணியுடன் இணைவார்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவில் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற் கொண்டுள்ள இலங்கை அணி, இரண்டு டெஸ்ட் போட்டிகள் மற்றும் மூன்று ரி-20 போட்டிகள் கொண்ட தொடர்களில் விளையாடவுள்ளது. நாளை மறுதினம் 24 ஆம் திகதி லக்னோ மைதா னத்தில் நடைபெறவுள்ள ரி-20 போட்டியுடன் இந்தத் தொடர்கள் ஆரம்பமாகவுள்ளன.



## ரியோ ஓபன் டென்னிஸ் தொடர் ஸ்பெயின் வீரர் அல்கராஸ் சம்பியன்!

ரியோ ஓபன் ஏ.டி.பி. டென்னிஸ் தொடரின் ஆடவர் ஒற்றையர் பிரிவு இறுதிப்போட்டி நேற்று நடைபெற்றது. இதில் ஸ்பெயின் வீரர் கார்லோஸ் அல்கராஸ், அர்ஜெண்டினா வீரர் டியகோ ஸ்கெவொர்ட்ஸ்மனுடன் மோதியிருந்தார்.

இந்தப் போட்டியில் கார்லோஸ் அல்கராஸ் 6-4, 6-2 என்ற நேர் செட்களில் வெற்றிபெற்று சம்பியன் கிண்ணத்தைக் கைப்பற்றினார்.

## உலக சம்பியனை வென்ற இளம் கிராண்ட் மாஸ்டர் பிரக்ஞானந்தாவுக்கு சச்சின் டுவிட்டரில் பாராட்டு

எயார்திங்ஸ் மாஸ்டர்ஸ் ரபிட் செஸ் போட்டித் தொடர் இணையவழியில் நடைபெற்று வருகிறது. இந்தத் தொடரில் 16 வீரர்கள் பங்கேற்றுள்ளனர்.

தொடரின் எட்டாவது சுற்றில் சென் னையைச் சேர்ந்த இளம் கிராண்ட் மாஸ்டர் பிரக்ஞானந்தா, உலக சம்பியனும் முதல் நிலை வீரருமான நோர்வேயின் மக்னஸ் கார்ல்சனை எதிர்கொண்டார்.

கறுப்பு நிற காய்களுடன் விளையாடிய பிரக்ஞானந்தா 39 ஆவது நகர்த்த லின்போது வெற்றியை தன் வசமாக் கினார். தொடரில் இரண்டாவது வெற்றி யைப் பதிவு செய்த பிரக்ஞானந்தா, மொத் தம் 8 புள்ளிகளுடன் 12ஆவது இடத்தில் உள் ளார்.

உலக சம்பியன் கார்ல்சனை தோற்கடித்த கிராண்ட் மாஸ்டர் பிரக்ஞானந்தாவுக்கு கிரிக் கெட் பிரபலம் சச்சின் டெண்டுல்கர் பாராட்டுத் தெரிவித்துள்ளார்.



இதுதொடர்பாகடெண்டுல்கர்வெளியிட்டுள்ள டுவிட்டர் குறிப்பில், அனுபவம் வாய்ந்த, உலக சம்பியன் மக்னஸ் கார்ல்சனை தோற்கடித்தது மாயாஜாலம். மேன்மேலும் வெற்றிகள் தொடர வாழ்த்துக்கள். இந்தியாவுக்கு நீங்கள் பெருமை சேர்த்திருக்கிறீர்கள், என பதிவிட்டுள்ளார்.

# இந்தியா– தென்னாபிரிக்கா ரி–20 தொடர் போட்டி மைதானங்களில் மாற்றம்?

மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான ஒருநாள் தொடரை 3-0 என்ற கணக்கிலும், ரி-20 தொடரை 3-0 என்ற கணக்கிலும் இந்திய கிரிக்கெட் அணி முழுமையாகக் கைப்பற்றியது.

இந்திய அணி அடுத்து இலங்கையுடனான தொடர்களில் பங்கேற்கிறது. அந்தத் தொடர் கள் முடிவடைந்ததும் ஐ.பி.எல். தொடர் இந்தி யாவில் நடைபெறவிருக்கிறது.

ஐ.பி.எல். போட்டிகளுக்குப் பின்னர் தென் னாபிரிக்க அணி இந்தியாவில் சுற்றுப்பயணம் செய்து ஐந்து ரி-20 போட்டிகளில் விளை யாடவிருக்கிறது.

இந்தியா - தென்னாபிரிக்க அணிகளுக் கிடையேயான ரி-20 தொடருக்கான மைதானங்கள் மற்றும் திகதிகளை இந்திய கிரிக்கெட் சபை ஏற்கனவே அறிவித்திருந்தது. அதன்படி முதல் போட்டி ஜூன் 9 ஆம் திகதி சென்னையிலும், பெங்களூர், நாக் பூர், ராஜ்கோட், டெல்லி ஆகிய




இடங்களில் முறையே ஜூன் 12, 14, 17 மற்றும் 19 ஆம் திகதிகளிலும் நடைபெற வுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில் இந்தத் தொடருக்காகத் தீர்மானிக்கப்பட்ட இடங்களில் மாற்றம் செய்யப்படலாம் என்று செய்திகள் வெளியாகி யுள்ளன. கொரோனா மற்றும் பருவநிலை காரணமாக இடங்களை மாற்றுவதற்கும், ஒன்று அல்லது இரண்டு இடங்களில் மட்டும் 5 போட்டிகளையும் நடத்தி முடிக்கலாமா? என் பது குறித்தும் இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை ஆலோசித்து வருவதாகக் கூறப்படுகிறது. இதுதொடர்பாக வருகிற மார்ச் இரண்டாம் திகதி நடைபெறும் கிரிக்கெட் சபையின் கூட் டத்தில் முடிவு செய்யப்படுமென்று உள்ளகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இந்தியக் கிரிக்கெட்டில் விளையாட்டு மேம்பாட்டு மை யத்தின் பொது மேலாளராக இந்திய அணியின் முன்னாள் வேகப்பந்து வீச்சாளரும், முன்னாள் தேர்வுக்குழு உறுப்பினருமான அபய் குருவில்லா நியமிக்கப்படவிருக்கிறார். நடைபெறவுள்ள கூட்டத்தில் அறிவிக்கப்படும் என்று செய்திகள் வெளியாகியுள்ளன.

# எல்லோரும் கண்ட கனவு பகல் கனவாக மாறியுள்ளது



## எம்.உதயகுமார் தெரிவிப்பு

ஆட்சிக்கு வரும் போது பலர் பல்வேறு கதைகளை கூறினார்கள். அவர் கண்ட கனவு நனவாகிறது. இவர் கண்ட கனவு நனவாகிறது என்றெல்லாம் சொன்னார்கள். ஆனால் இப்போது எல்லோரும் கண்ட கனவு பகல் கனவாக மாறியுள்ளதாக நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், தொழிலாளர் தேசிய சங்கத்தின் பிரதி தலைவருமான எம். உதயகுமார் தெரிவித்தார்.

கொட்டகலை போகாவத்தை பகுதியில் முன்னாள் அமைச்சரும் தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான பழனி திகாம்பரம் தலைமையில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில் -

மலையகத்தைப் பொறுத்த வரையில் அமைச்சர் திகாம்பரம் அமைச்சராக இருந்தபோது மலையக மக்களுக்கு பாரிய அளவில் சேவை செய்தார். தனி வீடுகளைக் கட்டிக்கொடுத்தார்.

உரிமைகளைப் பெற்றுக்கொடுத்தார். மக்களுக்குத் தேவையானவற்றைப் பெற்றுக்கொடுத்தார். ஆனால் அதற்கு பிறகு ஆட்சிக்கு வந்தவர்கள் ஒரு வீடமைப்பு திட்டத்தைக் கூட ஆரம்பிக்கவில்லை. மாறாக கனவு கண்டு கொண்டிருக்கிறார்கள். கொட்ட கலை பகுதியில் மாத்திரம் எனக்கு நினைவிருக்கும் வரையில் கொட்ட கலை, போகாவத்தை, ஹரிங்டன் குயின்ஸ்பெரி என கொட்டகலை பகுதியில் மாத்திரம் சுமார் 350 இற்கும் மேற்பட்ட வீடுகள் கட்டிக்கொடுக்கப்பட்டுள்ளன. அப்போது இருபது பேர்ச் காணியில் வீடு கட்டி தருவேன் என்றார்கள்.

அதன் பின் அதுவும் சாத்தியமில்லை 10 பேர்ச்சஸ் காணியில் கட்டித்தருவோம் என்றார்கள். வாக்குறுதி பெற்றுக்கொடுக்கும் போது 20 பேர்சஸ் சாத்தியமில்லை. என்று தெரியாதா? இப்போது இருபது பேச்சஸ்ஸூமில்லை 10 பேச்சஸ்ஸூமில்லை மாடி வீடும் இல்லை தனி வீடும் இல்லை குருவி கூடுகளும் இல்லை.

திகாம்பரம் அமைச்சுப்பதவி ஏற்கும் போது மலையக மக்களுக்கு சேவை செய்யக்கூடிய காணியுரிமையுடன் ஓர் அமைச்சுப் பதவி வழங்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

அதற்கமைய மலைநாட்டு புதிய கிராமங்கள் அமைச்சு என்று ஒரு புதிய அமைச்சு உருவாக்கப்பட்டது. ஆனால் இந்த அரசாங்கம் வந்ததும் தோட்ட வீடமைப்பு மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சு எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது. ஆனால் அந்த அமைச்சிலும் வீடமைப்புமில்லை உட்கட்டமைப்புமில்லை. இப்போது அது கோதுமை விநியோகிக்கும் இராஜாங்க அமைச்சாகத் தரம் உயர்த்தப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் சிறந்த முறையில் சேவையாற்றியதற்காக மலைநாட்டு புதிய கிராமங்கள் வீடமைப்பு அமைச்சுக்கு விருது கிடைத்தது.

இப்போது விருது வழங்க வேண்டும் என்றால் வேலை செய்யாமைக்காகவே விருது வழங்க வேண்டும். இன்று பொருளாதார நெருக்கடி காரணமாக மக்கள் பல்வேறு இன்னல்கள் அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். மூன்று வேளை சாப்பிடமுடியாதுமிகவும்துன்பப்படுகிறார். ஆனால், இன்றுள்ளவர்கள் உள்ளாச பூங்கா அமைத்துக்கொண்டிருக்கிறார்கள். - என அவர் மேலும் தெரிவித்தார்.

# புங்குடுதீவு - இறுப்பிட்டி பகுதி மக்களின் நலன்கருதி புதிய பஸ் சேவை ஆரம்பம்

புங்குடுதீவு - இறுப்பிட்டி பகுதி மக்களின் நலன்கருதி புதிய பஸ் சேவை ஒன்று நேற்று (திங்கட்கிழமை) இலங்கை போக்குவரத்து சபையால் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது. வேலணை - புங்குடுதீவு - இறுப்பிட்டி பகுதி மக்கள் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் வேலணை பிரதேச நிர்வாகத்தினூடாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் முன்வைத்திருந்த கோரிக்கைக்கு அமைவாக நேற்று புதிய பஸ் சேவை இறுப்பிட்டி அரியனார் பிள்ளையார் ஆலய முன்றிலிலிருந்து முன்னெடுக்கப்பட்டுள்ளது.



மேற்படி பகுதி மக்களின் அவசிய தேவை கருதியதான கோரிக்கையை ஏற்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கட்சியின் யாழ்.மாவட்ட நிர்வாக பொறுப்பாளர் சிவகுரு பாலகிருஷ்ணனுக்கு வழங்கியிருந்த அறிவுறுத்தலுக்கிணங்க இலங்கைப் போக்குவரத்து சபையின் வடபிராந்திய பொது முகாமையாளர் குணபால செல்வத்துடன் இந்தப் பிரச்சினை தொடர்பில் கலந்துரையாடப்பட்டிருந்தது.

இந்த நிகழ்வில் வேலணை பிரதேச சபையின் தவிசாளர் நமசிவாயம் கருணாகரகுருமூர்த்தி. ஊர்காவற்றுறை பிரதேச சபை தவிசாளர் மருதயினார் ஜெயகாந்தன், கட்சியின் வேலணை பிரதேச நிர்வாக பொறுப்பாளர் சின்னையா சிவராசா, வேலணை பிரதேச உதவி நிர்வாக பொறுப்பாளர் அனுசியா ஜெயகாந்த், ஊர்காவற்றுறை பிரதேச உதவி நிர்வாக செயலாளர் புவி உள்ளிட்ட கட்சியின் பல பிரமுகர்கள் கலந்துகொண்டிருந்தனர். இன்றையதினம் ஆரம்பித்து வைக்கப்பட்ட குறித்த சேவையானது புங்குடுதீவு பெருங்காட்டு சந்தியூடாக இறுப்பிட்டி கேரதீவு மடத்து வெளியை சென்றடைந்து யாழ்ப்பாணத்துக்கான சேவை முன்னெடுக்கப்பட்டது.

# கூலிக்கு யாசகம் பெற்றவர்கள் யாழ்ப்பாணத்தில் கைதாகினர்!

சாவகச்சேரியில் குழந்தைகளுடன் யாசகம் பெற்றவர்கள் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டனர்.

யாழ்ப்பாணத்திலுள்ள விடுதி ஒன்றின் உரிமையாளர், தென்னிலங்கையைச் சேர்ந்தவர்களை கூலிக்கு அமர்த்தி யாசகம் பெறுகிறார் என அண்மைய நாள்களில் பல்வேறு இடங்களில் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

அதனடிப்படையில் சாவகச்சேரி நகரில் யாசகம் பெற்றவர்கள் நேற்று (திங்கட்கிழமை) கைது செய்யப்பட்டனர்.

இவ்வாறு யாசகம் பெறுபவர்களின் பணம் விடுதி உரிமையாளரிடம் ஒப்படைக்கப்பட்டதும் யாசகத்தில் ஈடுபட்டோருக்கு தினக் கூலி வழங்கப்படுவதாகப் பல தரப்பினராலும் குற்றச்சாட்டப்பட்டது. அதனடிப்படையில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துவருகின்றமைகுறிப்பிடத்தக்கது.

# தலவாக்கலையில் மரம் விழுந்து வீதியில் சென்ற ஆசிரியர் சாவு





நுவரெலியா பிரதான வீதியின் தலவாக்கலை மல்லியப்பு சந்தியில் முன்னெடுக்கப்பட்ட பொதுமக்க ளின் போராட்டம் தற்காலிகமாகக் கைவிடப்பட்டுள்ளது.

பிரதேச உயர் பொலிஸ் அதிகாரிகள், ஆசிரியரின் மரணத்திற்கு நீதியை பெற்று தருகிறோம் என வழங்கிய உறுதிமொழிக்கமைய போராட்டம் கைவிடப்பட்டுள்ளது.

எனினும் ஆசிரியரின் மரணத்துக்கு நியாயம் கிடைக்காத பட்சத்தில் மீண்டும் போராட்டம் தொடரும் எனப் பொதுமக்கள் எச்சரித்துள்ளனர்.

நுவரெலியா - ஹற்றன் பிரதான வீதியில் தலவாக்கலை மல்லியப்பு பகுதியில் உள்ள ஆலமரத்தை வெட்டும் பொழுது அதன் கிளைகள் அவ்வீதியினூடாக மோட்டார் சைக்கிளில் சென்ற ஆசிரியர் ஒருவர் மீது முறிந்து வீழ்ந்ததில் அவர் உயிரிழந்தார்.

இவ்வாறு உயிரிழந்தவர் தலவாக்கலை லோகி தோட்டத்தைச் சேர்ந்த வேலுசாமி மகேஸ்வரன் (வயது 39) 2 பிள்ளைகளின் தந்தை எனவும் அவர் தலவாக்கலை தமிழ் மகாவித்தியாலயத்தின் ஆசிரியர் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவத்துக்கு எதிர்ப்பு தெரிவித்தும் உயிரிழந்தவருக்கு நியாயத்தை பெற்று தருமாறும் கோரியே பொதுமக்கள் ஆர்ப்பாட்டமொன்றை முன்னெடுத்தனர்.

இதனால் குறித்த வீதியூடான போக்குவரத்து சுமார் 4 மணித்தியாலயங்களுக்கும் மேலாகத் தடைப்பட்டது.

இதனால் பொதுமக்கள் பாரிய அசௌகரியங்களை எதிர்கொண்டனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை ஆலமரம் உள்ள வீட்டின் உரிமையாளர் லிந்துலை பொலிஸில் சரணடைந்துள்ளார்.

எவ்வாறாயினும் சந்தேக நபரைக் கைதுசெய்து விசாரணைகள் இடம்பெறுகின்றன எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். இதேவேளை, மேற்படி ஆலமரத்தை வெட்டி அகற்ற தலவாக்கலை - லிந்துலை நகர சபையிடமோ, வீதி அபிவிருத்தி அதிகார சபையிடமோ மற்றும் பொலிஸாரிடமோ அனுமதி பெறப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது. இதேவேளை, ஆலமரத்தை வெட்டிய போதிலும் வாகனங்களை நிறுத்தி அனுப்புவதற்கு பாதுகாப்பு பொலிஸார் உரிய நடவடிக்கை எடுக்கவில்லை எனவும் பொதுமக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர். ஆலமரமரத்தின் கிளை முறிந்து வீழ்ந்ததால் அங்குள்ள ஆலயம் ஒன்றுக்கும் சேதமேற்பட்டுள்ளது. அத்துடன் மின் தூண் ஒன்றும் தொலைத் தொடர்பு தூண் ஒன்றும் சேதமடைந்துள்ளன.

இந்தச் சம்பவம் தொடர்பில் தலவாக்கலை மற்றும் லிந்துலை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 22.02.2022இல் வெளியிடப்பெற்றது.